# ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
## சாதாரணக் கூட்டம்

***2023–ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் நாள் திங்கள்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற உள்ள சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.***

***முன்னிலை :- திரு. த. ரவிக்கண்ணன், B.B.A,***
***நகர்மன்றத் தலைவர்***

***பொருள் எண்:01***

நகர்புர உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள்,துணை மேயர்கள், மன்றத் தலைவர்கள்,மன்றத்துணைத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்குதல் தொடர்பாக ***நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்: 98 நாள்:13.07.2023–*** *னை* மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :547** **அரசாணை எண்:98ஐ மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

***பொருள் எண்:02***

இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பியிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண் 399/2023/A2 நாள் 06.07.2023 கடிதத்தில் 2023–2024–ம் நிதியாண்டுக்குரிய நகராட்சி பங்களிப்பு தொகை ரூ75000/– செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டதன்படி , தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு பயிற்சி கட்டணம் ரூ75000/–யை செலுத்துவதற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்:5335/2021/சி1)**

**தீர்மானம் :548** **அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:03***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2017–18 முதல் 2022–23 ஆண்டு வரை சேமநல நிதி வட்டித் தொகைக்கான வட்டி கோரும் பிரேரணைகள் பட்டய கணக்கர் மூலம் தயார் செய்ய வேண்டியுள்ளது. அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ50000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்:8106/02/பி1)**

**தீர்மானம் :549** **அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:04***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கோட்டைப்பட்டி நீர் தேக்கத் தொட்டியை சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்டியதற்கு தொடரப்பட்ட வழக்கு எண் OS, N0.332/2013 ன்படி வழக்கு நடை பெற்று வந்தது. மேற்படி வழக்கு நகராட்சிக்கு எதிராகவும், வாதிக்கு ஆதரவாகவும் வழக்கின் தீர்ப்புரை 30//03/2023ம் தேதி வரப்பெற்றுள்ளது. இவ்வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கை நடத்தியதற்கு வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவுத் தொகை ரூ.6000//ஐ திரு. அன்னக்கொடி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) வழக்கறிஞர் கட்டணம் ரூ.6000/– தொகைக்கு – மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவின தொகையினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) நகர்மன்ற தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:5617/2013/இ2)**

**தீர்மானம் :550** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:05***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கோட்டைப்பட்டி நீர் தேக்கத் தொட்டியை சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்டியதற்கு தொடரப்பட்ட வழக்கு எண் OS, N0.332/2013 ன்படி வழக்கு நடை பெற்று வந்தது. மேற்படி வழக்கு நகராட்சிக்கு எதிராகவும், வாதிக்கு ஆதரவாகவும் வழக்கின் தீர்ப்புரை 30//03/2023ம் தேதி வரப்பெற்றுள்ளது. இவ்வழக்கில் நகராட்சி சார்பாக மேல்முறையீடு செய்யலாம் என வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். எனவே இந்நகராட்சி சார்பாக மேல்முறையீட்டுவழக்கு தாக்கல் செய்யவும், வழக்கிற்கான கட்டணம் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** 1) வழக்கறிஞர் கட்டணம் தொகைக்கு - மன்றம் அனுமதி வழங்கலாம்.
2)செலவின தொகையினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3)நகர்மன்ற தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.
**(ந.க.எண்:5617/2013/இ2)**

**தீர்மானம் :551 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:06***

இந்நகராட்சிக்கு 2023-2024ம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள் வெள்ளை பேப்பர் மற்றும் கம்ப்யூட்டர் பொருட்கள் அ4,அ5 பேப்பர்,டோனர்கள் மற்றும் சாமான்கள் மற்றும் கணிணி மென்பொருள்கள் வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு ரூ10,00,000/- (பத்து லட்சம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் :552 அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:07***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளுக்குட்பட்ட நகர்மன்ற தலைவர், துணைத் தலைவர்,உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு அடையாள அட்டை தயார் செய்து வழங்க வேண்டியுள்ளது. மேற்கண்ட அடையாள அட்டை தயார் செய்து வழங்க உத்தேச செலவுத் தொகை ரூ10,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் :553 அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:08***

இந்நகராட்சிக்கு 2023-2024ம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், மற்றும் பாரங்கள் அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன்கள், சொத்து வரி கணிணி ரசீது சேவை மைய ரசீதுகள் கழிப்பறை டோக்கன்கள் அச்சடித்து வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு ரூ15,00,000/- (பதினைந்து லட்சம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் :554 அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:09***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக 2022–2023ம் நிதியாண்டிற்கு தேவையான எழுது பொருட்கள், பேப்பர் மற்றும் கம்ப்யூட்டர் பொருட்கள் அ4, அ5, பேப்பர் மற்றும் டோனர்கள் போன்ற பொருட்களை வாங்கிக் கொள்வதற்கு நகர்மன்ற தீர்மான எண் 60 நாள் 25.02.2022ன் படி ரூ.10,00,000/– க்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட பொருட்களை வாங்கிய வகைக்கு ஜனவரி 2023ம் தேதி வரை ரூ.7,89,450/– செலவிடப்பட்டுள்ளது. தற்போது அவசர அவசியம் கருதி ரூ.3,86,000/– மதிப்பீட்டிற்கு டோனர்கள் பெறப்பட்டு பட்டியல் வரபெற்றுள்ளது.எற்கனவே மன்ற அனுமதி பெற்ற தொகைக்கு ரூ.2,10,550/– மட்டும் செலவிடப்படாமல் உள்ளது.தற்போது ஏற்பட்டுள்ள கூடுதல் செலவின்ரூ.2,00,000/– செலவினத்தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** 1)மேற்கண்ட கூடுதல் மதிப்பூட்டுத் தொகைக்கு மன்றம் அனுமது வழங்கலாம்.
2)செலவினத் தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்:2984/2022/B2)**

**தீர்மானம் :556**
1) **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**
2) **கூடுதல் செலவினத்தொகை ரூ2.00/- இலச்சத்திற்கு அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:10***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் வருகின்ற 22.07.2023ம் தேதி ஆண்டாள்கோவில் நிர்வாகத்தின் சார்பில் ஆடிப்பூர பெரிய தேரோட்டம் நடைபெற உள்ளது. அதற்கு முன்னதாக நகரில் 10 நாட்கள் திருவிழா நடைபெற உள்ளது. எனவே மேற்கண்ட திருவிழாக்களில் கலந்து கொள்வதற்காக வெளியூர்களில் இருந்து வருகை தரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரும் பொருட்டு கீழ்க்கண்ட இடங்களில் சிறுநீர் கழிப்பிடம் அமைக்க வேண்டியது அவசியமாகின்றது.

1) திருப்பாற்கடல் எதிர்புறம் தற்காலிக சிறுநீர் கழிப்பிடம் அமைத்தல்
2) சந்தியக் கிணற்றுத் தெரு இறக்கத்தில் தற்காலிக சிறுநீர் கழிப்பிடம் அமைத்தல்

மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.20000/- ஆகும் பணியினை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 Section 57 (3) ன் கீழ் விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நபருக்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2)நகர்மன்ற தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.
**(ந.க.எண்:2984/2022/B2)**

**தீர்மானம் :557** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

***பொருள் எண்:11***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளுக்கும் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் செண்பகத் தோப்பு குடிநீர் திட்டம் மூலம் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் திட்டத்தில் பணியாற்றிய பணியாளர்கள் ஓய்வு பெற்றதனால் தற்பொழுது பொது மக்களுக்கு குடிநீர் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தற்பொழுது செண்பகத்தோப்பு தலைமை நீரேற்று நிலையம் 7 கிணறுகள் மற்றும் 11 ஆழ்துளை கிணறுகள் குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட பம்பு ஆப்பரேட்டர் மற்றும் OHT Watchman and Value Operator போன்ற

தற்காலிக பணியாளர்கள் மற்றும் TEXCO பணியாளர்கள் 3 பேர் வேறு துறைக்கு சென்று விட்டதால் குடிநீர் பணியினை மேற்கொள்வதற்கு அவசர அவசியம் கருதி பணியாளர்கள் தேவைப்படுவதால், தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள கீழ்க்காணும் பணிகளுக்கு மொத்தம் **10** பணியாளர்களுக்கு மாதம் ரூ.1,57,000/- வீதம் மூன்று மாத காலத்திற்கு ரூ.**4,71,000/-** க்கு ( ரூபாய் நான்கு லட்சத்து எழுபத்தி ஒராயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **பணியின் விபரம்** | **தேவைப்படும் நபர்கள்** |
|---|---|---|
| 1 | தண்ணீர் திறப்பாளர் | 2 |
| 2 | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வால்வு திறப்பாளர் மற்றும் காவலர் | 4 |
| 3 | பம்பு ஆப்பரேட்டர் | 2 |
| 4 | காவல் பணியாளர் ( செண்பகத் தோப்பு ) | 2 |
| | மொத்தம் | **10** |

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) தொகையினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்
3) நகர்மன்ற தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:3626/2023/இ1** )

**தீர்மானம் :558** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

***<u>பொருள் எண்:12</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலக நகர்மன்றத் தலைவர் பயன்படுத்தும் வாகனம் TN-84-P-1414 Mahindra Scorpio வாகனத்திற்கு புதியதாக 1) Engine Oil 2) Crown Oil 3) Gear Oil 4) Oil Filder, Diesel Filter, Air Filter, Coolant Oil ஆகியவை புதியதாக மாற்றம் செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது, அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை ஸ்ரீ கிருஷ்ணா மோட்டார்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பணியினை மேற்கொண்ட வகைக்கு ஆகும் செலவு தொகை ரூ.**10438/-** ஐ ( ரூபாய் பத்தாயிரத்து நானூற்றி முப்பத்தி எட்டு மட்டும் ) இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் ஓட்டுநர் திரு.பா.செந்தில்குமார் என்பவர் தனது சொந்த பணத்தில் இருந்து செலவு செய்துள்ளார். எனவே மேற்கண்ட தொகையினை இந்நகராட்சி ஓட்டுநர் திரு.பா.செந்தில்குமார் என்பவருக்கு வழங்கிடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.**10438/-** க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்
2) தொகையினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்ற தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:0113/2023/இ1**)

**தீர்மானம் :559** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

***<u>பொருள் எண்:13</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலக ஆணையர் பயன்படுத்தும் TN-84-M-9273 Mahindra Jeep வாகனத்திற்கு காப்பீடானது 04.08.2023 ம் தேதியுடன் முடிவடைகின்றது. எனவே மேற்காணும் வாகனத்திற்கு மேலும் ஓராண்டிற்கு காப்பீட்டினை புதுப்பித்தல் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே TN-84-M-9273 Mahindra Jeep வாகனத்திற்கு ஒரு வருடத்திற்கு காப்பீட்டினை புதுப்பித்தல் செய்வதற்கான கட்டணம் ரூ.**17736/-** ஐ United India Insurance Co, Ltd, Sivakasi என்ற நிறுவனத்திற்கு செலுத்திடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.**17736/-** க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்
2) தொகையினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்ற தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:2058/2023/இ1)**

**தீர்மானம் :560** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

***<u>பொருள் எண்:14</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலக நகர்மன்றத் தலைவர் பயன்படுத்தும் TN-84-P-1414 Mahindra Scorpio வாகனத்திற்கு காப்பீடானது 04.08.2023 ம் தேதியுடன் முடிவடைகின்றது. எனவே மேற்காணும் வாகனத்திற்கு மேலும் ஓராண்டிற்கு காப்பீட்டினை புதுப்பித்தல் செய்ய வேண்டியது அவசியமாகிறது.எனவே TN-84-P-1414 Mahindra Scorpio வாகனத்திற்கு ஒரு வருடத்திற்கு காப்பீட்டினை புதுப்பித்தல் செய்வதற்கான கட்டணம் ரூ.**33017/-** ஐ United India Insurance Co, Ltd, Sivakasi என்ற நிறுவனத்திற்கு செலுத்திடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.**33017/-** க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்
2) தொகையினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்ற தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம். ( **ந.க.எண்:2058/2023/இ1)**

**தீர்மானம் :561** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

***<u>பொருள் எண்:15</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஒப்பந்ததாரர்களுக்கு ஜனவரி 2023 முதல் மார்ச் 2023 வரை சரக்கு மற்றும் சேவை வரி பிடித்தம் செய்து மத்திய அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. அதனை இணைய தளத்தில் பதிவு செய்ய திரு. ஏ. சரவணன் ( Income Tax Practitioner ) அவர்கள் மூலமாக மேற்கொள்ளவும் அதற்கான கட்டணம் ஜனவரி 2023 முதல் மார்ச் 2023 வரை ரூ.4500/- வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

( **ந.க.எண்:5715/2017/ இ1**)

**தீர்மானம் :562** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

***<u>பொருள் எண்:16</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி தண்ணீர் தலைமையிடமான செண்பகத்தோப்பு பேயனாற்று படுகையில் புதியதாக இரண்டு எண்ணம் நீர் உறிஞ்சு கிணறுகள் ( Infiltration Well ) அமைக்கப்பட்டு வருகின்றன. எனவே புதியதாக அமைக்கப்பட்டு வரும் கிணறு எண் **8** மற்றும் கிணறு எண் 9 ஆகிய இரு கிணறுகளுக்கும் மின் இணைப்பு பெறுவதற்கு மின் வாரியத்திற்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் வாரியத்தின் கேட்பு கடிதத்தில் கிணறு ஒன்றிற்கு புதிய மின் இணைப்பு பெறுவதற்கு ரூ**.61,700/** செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே இரு கிணறுகளுக்கு புதிய மின் இணைப்பு பெறுவதற்கு **61700 x 2 = Rs.1,23,400/-** ஐ தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்திடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

( **ந.க.எண்:3075/2023/ இ1**)

**தீர்மானம் :563** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

***<u>பொருள் எண்:17</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 15, கல்லரை ரோடு, செட்டியக்குடித் தெரு, வார்டு எண் 27 முதலியார் பட்டித் தெரு மற்றும் வார்டு எண் 21 நம்பி நாயுடு தெரு, இரட்டை காளியம்மன் கோவில் தெரு ஆகிய தெருக்களில் உள்ள சிறுமின் விசை இறைப்பான் மோட்டார்கள், டேங்க் மேடைகள் சிதிலமடைந்தும் இடிந்து விழும் தருவாயிலும் இருந்து வருகின்றது. மேலும் தற்போது கோடை காலம் என்பதாலும், பொது மக்களின் குடிநீர் தேவை அதிகரித்து வருவதாலும் மேற்கண்ட பழுதுகளை உடன் நீக்கம் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்வற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,95,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:3004/2023/ இ1)**

**தீர்மானம் :564** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***பொருள் எண்:18***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 27 முதலியார் பட்டித் தெரு மற்றும் வார்டு எண் 29 இரட்டை காளியம்மன் கோவில் தெருக்களில் உள்ள இரு ஆழ்துளை கிணறுகள் பயன்பாடின்றி இருந்து வருகின்றன.மேலும் அதில் காணும் சின்டெக்ஸ் தொட்டிகள் சிதிலமடைந்து பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்து வருகின்றன. தற்போது கோடைகாலம் என்பதால் புதியதாக சின்டெக்ஸ் தொட்டிகள் அமைத்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டியது மிகவும் அவசியமாகின்றது, எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. **1,00,000/-**க்கு (ரூபாய் ஒரு லட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:3075/2023/ இ1)**

**தீர்மானம் :565** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***பொருள் எண்:19***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 24 மேட்டுத் தெரு மற்றும் வார்டு எண் 16 மடத்துப்பட்டி தெரு ஆகிய இரு இடங்களில் உள்ள சிறு பாலங்கள் சேதமடைந்து மழைநீர் வடிகால் சாலையில் தேங்கியுள்ளது. இதன் காரணமாக அப்பகுதி மக்கள் மேற்கண்ட சாலைகளை பயன்படுத்த முடியாத சூழல் உள்ளது மேலும் இதன் காரணமாக சுகாதாரக் கேடு ஏற்படும் சூழல் உள்ளது. மேற்கண்ட சிறுபாலங்களை அகற்றி RCC பைப் அமைத்து சரி செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. **1,25,000/-** க்கு ( ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**( ந.க.எண்:3004/2023/ இ1)**

**தீர்மானம் :566** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***பொருள் எண்:20***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி குடிநீர் விநியோகம் நகரின் அனைத்து பகுதிகளிலும் சுமார் 73.00 கி.மீ. பகிர்மானக் குழாய் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது, மேற்படி பகிர்மானக் குழாய்கள் அனைத்தும் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட 90 mm PVC பைப்புகள் ஆகும். தற்பொழுது சுமார் 2.00 மீட்டர் ஆழத்தில் உள்ளதால் போதுமான நீர் அழுத்தம் இல்லாமலும் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதால் கடைசி பகுதிவரை குடிநீர் சரிவர கிடைக்கவில்லை, தற்பொழுது உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் ஏற்கனவே உள்ள பகிர்மானக் குழாய்களை மாற்றி DI பைப்புகள் பதிக்க வேண்டியுள்ளது. மேலும் செண்பகத்தோப்பு நகராட்சி குடிநீர் திட்டத்திலிருந்து பெறப்படும் குடிநீர் கோட்டைப்பட்டி நகராட்சி குடிநீர் திட்டத்திலிருந்து பெறப்படும் குடிநீர் கோட்டைப்பட்டி நீர்த்தேக்கத்திலும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலும் சேகரம் செய்து விநியோகிக்கப்படுகிறது,

தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்து தண்ணீர் தேக்க முடியாத நிலையில் உள்ளது எனவே 10 லட்சம் லிட்டர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து நகரில் உள்ள பகிர்மானக் குழாய் மற்றும் பீடர் மெயின் குழாய்கள் மாற்றியமைப்பதற்கும் உரிய திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு பெறவேண்டியுள்ளது, திட்டப் பிரேரணை தயார் செய்ய **Consultant** நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:2892/2023/ இ1)**

**தீர்மானம் :567** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***<u>பொருள் எண்:21</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 31, மஞ்சப்பூ தெருவினில் சுமார் 150 க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. மேலும் அப்பகுதியில் இரண்டு சிறு பாலங்கள் சேதமடைந்து மழை காலங்களில் சாலையில் தண்ணீர் தேங்கும் நிலையில் உள்ளது. இதனால் அப்பகுதி மக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் பள்ளி கல்லூரி மாணவர்கள் அச்சாலையை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட இரண்டு சிறு பாலங்கள் (RCC Pipe) அமைப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**75,000/-**க்கு(ரூபாய் எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:3004/2023/ இ1)**

**தீர்மானம் :568** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***<u>பொருள் எண்:22</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 15, கீழப்பட்டி பிள்ளையார் கோவில் தெருவினில் சுமார் 50 க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. மேலும் அப்பகுதியில் இரண்டு சிறு பாலங்கள் சேதமடைந்து பொது மக்கள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் செல்வதற்கு இடையூறாக இருந்து வருகின்றது. எனவே பொது மக்கள் சுகாதாரம் கருதி இரண்டு புதிய RCC Pipe பாலம் அமைப்பது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**45,000/-**க்கு (ரூபாய் நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண் :3004/2023/ இ1)**

**தீர்மானம் :569** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***பொருள் எண்:23***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 9 பெருமாள்பட்டி 2வது கீழத் தெருவில் மழைநீர் வடிகால் சிதிலமடைந்து மழை காலங்களில் மழைநீர் சாலைகளில் தேங்கி நிற்கும் சூழல் நிலவுகின்றது. இதனால் அப்பகுதி பொது மக்களுக்கு சுகாதார கேடு ஏற்படும் சூழல் உள்ளது மேலும் அப்பகுதி மக்கள் தினசரி பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அந்த சாலையினை பயன்படுத்தி வருகின்றனர். மேற்கண்ட பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. **4,45,000/-**க்கு ( நான்கு லட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்: 2396/2023/ இ1 )**

**தீர்மானம் :570** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***பொருள் எண்:24***

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகர் பகுதிகளில் நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (NSMT 2022-23) நகரில் உள்ள தார்சாலைகளை புதுப்பிக்கும் பணி ரூ. 118.00 லட்சம் மதிப்பீட்டில் 24 சாலைப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. மேற்கண்ட சாலைப் பணிகளை ஆய்வு செய்ய Third Party Inspection பொறியியல் கல்லூரிகள் TUFIDCO மூலம் அங்கீகாரம் செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கலுசலிங்கம் பல்கலைக் கழகம் கல்லூரியின் மூலம் மூன்றாம் நபர் ஆய்வு பணி மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:0051/2023/ இ1)**

**தீர்மானம் :571** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***பொருள் எண்:25***

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண் 1090/2022/A1, Dated : 23.06.2023 ம் தேதிய கடிதத்தில் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் உள்ள Numeric UPS க்கான ஆண்டு பராமரிப்பு தொகை ரூ.**14278/-** ஐ ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகம் மூலம் செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ரூ.**14278/-** ஐ நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு UPS ஆண்டு பராமரிப்பு வகைக்காக செலுத்திடுவதற்கு அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண் 234/2023/ இ1)**

**தீர்மானம் :572** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***<u>பொருள் எண்:26</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் பகுதிகளில் Jio தொலை தொடர்பு நிறுவனத்தின் மூலம் **34** இடங்களில் கண்ணாடி இழை கேபிள் கொண்டு செல்லும் பொருட்டு ( Arial Cable Method ) Arial Tower அமைக்க அனுமதி கோரப்பட்டிருந்தது, அதன்படி Arial Tower அமைக்க கோரும் 34 இடங்களை ஆய்வு செய்து அதற்கான மதிப்பீடு Rs.6,10,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கும், மேலும் நகர் பகுதிகளில் 34 இடங்களில் டவர் அமைக்கும் பொருட்டு சாலையினை தோண்டி டவர் அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) நகர்மன்ற தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண் 2058/2023/இ1)**

**தீர்மானம் :573** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***<u>பொருள் எண்:27</u>***

இந்நகர் வார்டு எண் 13, மதுரை பிரதான சாலையில் மாரியம்மன் கோவில் எதிர்புறம் உள்ள தெருக்களுக்கு ஊரணிப்பட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து மதுரை பிரதான சாலை வழியாக குடிநீர் குழாய் செல்கிறது. மேற்கண்ட மதுரை பிரதான சாலையில் சுமார் **170** குடிநீர் விநியோக குழாய் சேதமடைந்து 13 வது பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பிரதான சாலையில் குடிநீர் விநியோக மாற்றி புதிய குடிநீர் குழாய் அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**1,10,000/-** க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) தொகையினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்
3) நகர்மன்ற தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண் 3536/2023/இ1)**

**தீர்மானம் :574** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***பொருள் எண்:28***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலக பொறியில் பிரிவு, உதவி பொறியாளர் அறையில் இயங்கி வந்த கணிணி மற்றும் பிரிண்டர் ஆகியவைகள் வாங்கப்பட்டு பல வருடங்கள் ஆகிய காரணத்தினால் தற்போது பழுதடைந்து தொடர்ந்து பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் இருந்து வருகின்றது. மேலும் பொறியாளர் அறையில் உள்ள பிரிண்டரும் வாங்கப்பட்டு பல வருடங்கள் ஆகிய காரணத்தினால் தற்போது பழுதடைந்து தொடர்ந்து பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் இருந்து வருகின்றது எனவே இந்நகராட்சி பொறியியல் பிரிவு பயன்பாட்டிற்கு **HP Brand Intel 12th Gen Core 13-1215 Processor** என்ற மாடல் கொண்ட கணிணி ஒன்றும் **Canon MF 244 DW Digital Multifunction Laser Printer** என்ற மாடல் கொண்ட பிரிண்டர் **2** எண்ணமும் வாங்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. மேற்கண்ட பொருட்களை வாங்குவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. **112000/-** க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்
3) நகர்மன்ற தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்:2788/2023/இ1 )**

**தீர்மானம் :575** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***பொருள் எண்:29***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி – பொது சுகாதாராப்பிரிவு டெங்கு கொசு ஒழிப்பு நோய் தடுப்பு காய்ச்சல் நடவடிக்கை பணிக்காக பயன்படுத்தப்படும் டெமிபாஸ் (அபேட்) மருந்து 200லிட்டர் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ2,00,000/– ( ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) இந்நகர்மன்றத் தலைவர் அவர்களின் அனுமதி 28/02/2023–ம் தேதி பெறப்பட்டுள்ளது. மேற்படி டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணியை மேற்கொள்ள பயன்படுத்தப்படும் (அபேட் ) டெமிபாஸ் மருந்து விநியோகம் செய்ய Tamil Nadu Medical Services Corporation Ltd (TNSMC) Paramount Pesticide Ltd நிறுவனத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.மேற்படி Paramount Pesticide Ltd நிறுவனமானது A TO Z Enterprises நிறுவனம் Probatior திரு.சரவணன் என்பவருக்கு அனுமதி வழங்கியுள்ளது. எனவே பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதி இந்நகராட்சிக்கு உட்பட்ட 33 வார்டுகளிலும் பயன்படுத்தப்படும் (அபேட் ) டெமிபாஸ் மருந்து 200லிட்டர் விநியோகம் செய்ய A TO Z Enterprises நிறுவனம் Probatior திரு.சரவணன் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி அரசு அங்கீகாரம் வழங்கியுள்ள நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதை மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
3) வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து இச்செலவினத் தொகையை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்:0280/2023/எச்1)**

**தீர்மானம் :576** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:30***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோவில் ஆடிப்பூரத் திருவிழா வருகிற 12/07/2023–ம் தேதி முதல் 25/07/2023–ம் தேதி வரை நடைபெற உள்ளது. இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக திருவாடிபூரத் தேரோட்டம் 22/07/2023–ம் தேதி நடைபெற உள்ளது. மேற்படி ஆடித்தேரோட்டம் நடைபெறும் நாளன்று குறைந்தது ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் தரிசிக்க வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திருவிழா முன்னேற்பாடுகள் குறித்த கூட்ட நடவடிக்கை மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 22/06/2023–ம் தேதி நடைபெற்றது. இக்கூட்டத்தில் 14/07/2023 முதல் 22/07/2023 வரை பொதுமக்கள் உபயோகத்திற்கு நடமாடும் கழிப்பறை

வாகனத்தை வாடகைக்கு எடுத்து நிறுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நடமாடும் கழிப்பறை வாகனத்தை அருகில் உள்ள தூத்துக்குடி மாநகராட்சியில் இருந்து பெற்று **14/07/2023** முதல் **22/07/2023** வரை உபயோகப்படுத்தி மீள மேற்கண்ட வாகனத்தை தூத்துக்குடி மாநகராட்சியில் ஒப்படைக்கும் வரை ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ**2,00,000/–** (இரண்டு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து இச்செலவினத் தொகையை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்:0280/2023/எச்1)**

**தீர்மானம் :577** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

***<u>பொருள் எண்:31</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி , பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண்– TN67K4717-க்கு பேட்டரி திறன் குறைந்து விட்டதால் , மேற்படி வாகனத்தை இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது. மேற்படி வாகனத்தை இயக்க முடியாத காரணத்தால் பொதுசுகாதாரப் பணிகளை மேற்கொள்ள மிகவும் சிரமமாக உள்ளது. எனவே பொது மக்களின் பொதுசுகாதார அவசியம் மற்றும் நலனை கருதில் கொண்டு , மேற்படி வாகன எண்– TN67K4717-க்கு புதிய பேட்டரி வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ **6,000/–**( ஆறாயிரம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து இச்செலவினத் தொகையை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்:3355 /2023/எச்1)**

**தீர்மானம் :578** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

***<u>பொருள் எண்:32</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண்– TN84J3915 TATA ACE-க்கு நான்கு டயர்களும் தேய்ந்துவிட்டதால் , வாகனத்தை இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது. மேற்படி வாகனத்தை இயக்க முடியாத காரணத்தால் பொதுசுகாதாரப் பணிகளை மேற்கொள்ள மிகவும் சிரமமாக உள்ளது. எனவே பொது மக்களின் பொதுசுகாதார அவசியம் மற்றும் நலனை கருதில் கொண்டு , மேற்படி வாகன எண்– TN84J3915 TATA ACE-க்கு நான்கு எண்ணம் டயர் மற்றும் டியூப் செட் (டயர் அளவு – சைஸ் **155**X12 ) வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ **20,000/–** (இருபதாயிரம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து இச்செலவினத் தொகையை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்:3354 /2023/எச்1)**

**தீர்மானம் :579** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

***<u>பொருள் எண்:33</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட **33** வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் ஸ்ரீவி எக்ஸ்னோரா என்ற நிறுவனம் மூலம் **90** DBC பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியமானது , **2016–**ம் வருடாந்திர மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி தொகை ரூ**185/–** ஆனது நாளது தேதி வரை வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மேற்கண்ட ஸ்ரீவி எக்ஸ்னோரா நிறுவனம், மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களின் **2022–23–**ம் ஆண்டிற்கான தினக்கூலி

பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ458/–வழங்குமாறு தெரிவித்துள்ளதால், மேற்கண்ட DBC பணியாளர்கள் தினக்கூலி தொகையை 185/–லிருந்து ரூ458/– (2022–23) நிர்ணயம் செய்யவும், மேற்கண்டவாறு 90 DBC பணியாளர்களுக்கு பதிலாக 50 DBC பணியாளர்களை நியமனம் செய்யவும் , அதற்கான ஊதியம் மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களின் செயல்முறை எண்–7/20400/2022, நாள்–15/06/2022–ல் தெரிவித்துள்ள , தினக்கூலி ஊதியம் ரூ458/–வீதம் ( ESI, EPF உட்பட) வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகைக்கும் , இதற்கான டெண்டர் கோரி ( மூன்று மாதம் காலத்திற்கு மட்டும்) பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து இச்செலவினத் தொகையை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்:3364/2022/எச்1)**

**தீர்மானம் :580** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:34***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட மருத்துவர் காலனியில் அமைந்துள்ள கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உருவாகும் கசடு கழிவு நீரை பகுப்பாய்வு செய்வதற்கு உண்டான செலவுத் தொகை ரூ14,988/– (பதினான்காயிரத்து தொள்ளாயிரத்து என்பத்தி எட்டு மட்டும்) , கசடு கழிவு சுத்திகரிப்பு நிலைய பராமரிப்பு ஒப்பந்ததாரர் திருமதி.P.மாரியம்மாள் என்பவரால் செலவு செய்யப்பட்டது. மேற்படி செலவுத் தொகை ரூ14,988/– ஒப்பந்ததாரர் திருமதி.P.மாரியம்மாள் என்பவருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து இச்செலவினத் தொகையை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்:6156/2023/எச்1)**

**தீர்மானம் :581** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:35***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் கடந்த ஆண்டு ஜுன்–2022ம் ஆண்டு முதல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த தூய்மை நகருக்கான மக்கள் இயக்கம் கடந்த ஓராண்டு காலமாக தீவிர தூய்மை பணிகள் , விழிப்புணர்வு முகாம்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் சிறப்பு தூய்மை பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் நகராட்சி பகுதியில் உள்ள நீர் நிலைகள் சுத்தம் செய்தல் , மழைநீர் கால்வாய் சுத்தம் செய்தல் , சுவரொட்டி பேனர்களை அகற்றுதல், கழிப்பறைகளை சுத்தம் செய்தல், பள்ளி மாணவர்களுக்கு திடக்கழிவு குறித்த விழிப்புணர்வு, பிளாஸ்டிக் குறித்த விழிப்புணர்வு மற்றும் சிறப்பாக பணியாற்றிய தூய்மை பணியாளர்களை பாராட்டி பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்வு ஓராண்டு சாதனை குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடம் ஏற்படுத்த நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ50,000/–(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும் ) மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து இச்செலவினத் தொகையை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்:3219 /2023/எச்1)**

**தீர்மானம் :582** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:36***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளிலும் தூய்மை பணிகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதியும் செயல்முறை கடிதம் எண்.32945/2022/EA2/SWM–18, நாள்:10.01.2023, படி RAAM & CO, கே.புதூர், மதுரை– 625007, என்கிற வெளிக்கொணர்வு முகமை நிறுவனத்திற்கு பணி உத்திரவு நாள்- 02.05.2023 முதல் வழங்கப்பட்டு 19.06.2023 அன்று பணி துவங்கபட்டது. இப்பணியில் வெளிக்கொணர்வு முகமை தூய்மை பணியாளர்கள் 154 நபர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் 8 நபர்கள், இப்பணிக்கான வாகனங்கள் தளவாடப்பொருட்கள் வழங்கவும், அவர்களுக்கான பணி உத்திரவில் தெரிவிக்கப்பட்டிருந்தும் இன்றைய தேதி (10.07.2023) வரை போதிய அளவில் பணியாளர்கள், வாகனங்கள், தளவாடப்பொருட்கள் எதுவும் மேற்கண்ட வெளிக்கொணர்வு முகமை நிறுவனத்தாரால் வழங்கப்படவில்லை. இதனால் நகரில் பெருமளவில் திடக்கழிவுகள் ஆங்காங்கே தேங்கி பொதுமக்கள் மற்றும் பொது சுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. இதுகுறித்து மேற்கண்ட வெளிக்கொணர்வு முகமைக்கு நினைவூட்டு கடிதம் மற்றும் நோட்டீஸ் வழங்கியும் எவ்வித முன்னேற்றமும் பணியில் காண்பிக்கப்படவில்லை. இந்நகராட்சிபகுதியில் உள்ள 33 வார்டுகளில் 12 வார்டுகள் மட்டும் ஏற்கனவே ஸ்ரீவி.எக்ஸ்னோரா தனியார் நிறுவன பணியாளர்கள் 100 நபர்களை கொண்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்கண்டRAAM&CO கே.புதூர், மதுரை– 625007 , வெளிக்கொணர்வு நிறுவனம் அவர்களுக்கு தூய்மை பணிகள் 02.05.2023 அன்று வழங்கப்பட்ட நிலையில் ஸ்ரீவி.எக்ஸ்னோரா தனியார் பணி உத்திரவு இவ்வலுவலக உத்திரவு ந.க.எண்.2424/2018/எச்1, நாள்:03.07.2023ன்படி, ஸ்ரீவி.எக்ஸ்னோரா தனியார் பணி உத்திரவு 03.07.2023 முதல் இரத்து செய்து ஏற்கனவே உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.தற்பொழுது, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் தேரோட்டம் 14.07.2023 முதல் துவங்க இருப்பதால் தினமும் பல்லாயிரக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். எனவே நகரின் பொதுசுகாதார நலன் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் தூய்மை பணிகளை சீரிய அளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது. தற்பொழுது வெளிக்கொணர்வு முகமை நிறுவனமான RAAM & CO, கே.புதூர், மதுரை– 625007, அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தூய்மை பணிகளுக்கான வேலை உத்தரவு மேற்கூறிய காரணத்தால் 10.07.2023 முதல் இரத்து செய்யப்படுவதால், பொதுமக்களின் நலன் கருதியும் மற்றும் பொதுசுகாதார நலன் கருதியும் ஸ்ரீவி எக்ஸ்னோரா நிறுவனம் 10/07/2023–ம் தேதிய சம்மதக்கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, ஏற்கனவே ஸ்ரீவி நகர் பகுதியில் 12 வார்டுகளில் 100 நபர்களான (32+68=100) கொண்டு , தூய்மை பணிகள் மேற்கொண்டுள்ள ஸ்ரீவி.எக்ஸ்னோரா தனியார் நிறுவனத்திற்கு மேற்கண்ட 12 வார்டுகள் மட்டும் பழைய ஊதிய விகிதத்திலேயே 11.07.2023 முதல் தூய்மை பணிகள் மேற்கொள்ள உத்திரவு வழங்கவும், இப்பணி உத்திரவானது மறுஒப்பந்த புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை தொடரவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து இச்செலவினத் தொகையை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்:2424 /2023/எச்1)**

**தீர்மானம் :583** **1) துாய்மை பணிகள் மேற்கொள்ள தனியார் நிறுவனமான RAAM & CO, கே.புதூர் என்ற நிறுவனத்திற்கு 02.05.2023 ம் தேதி வழங்கப்பட்ட வேலை உத்திரவினை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது.**
**2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர் பகுகிகளில் 12 வார்டுகளில் துாய்மை பணி மேற்கொள்ள ஸ்ரீவி எகஸ்னோரா என்ற நிருவனத்திற்கு மறு உத்திரவு வரும் வரை பணிமேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.**

***பொருள் எண்:37***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி , பொது சுகாதாராப்பிரிவு , நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்–20383/2022/எச்1, நாள்–09/12/2022–ல் பிராணிகளுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை விதிகள் 2001–ல் குறிப்பிட்டுள்ளபடி ,ஒவ்வொரு நகர் பகுதிகளிலும் சுற்றி திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவும் ,மேற்கண்ட வீதிகளில் குறிப்பிட்டுள்ளபடி, சுற்றி திரியும் தெருநாய்களை பாதுகாப்பாக பிடித்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதன்படி இந்நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளிலும் சுற்றி திரியும் தெருநாய்கள் குறித்து கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் மொத்தம் 545 என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய ஆகும் செலவீனத் தொகை குறித்து Animal Husbandary , Dairying , Fisheries and Fishermen Welfare (AH3) Department , அரசு ஆணை எண்–01, நாள்–17/03/2023–ல் ஒரு நாய் பிடிப்பதற்கு ரூ200/– மற்றும் அறுவை சிகிச்சை செய்ய செலவுத் தொகை ரூ1450/– மொத்தம் ரூ1650/– ஒரு நாய்க்கு உத்தரவு இடப்பட்டுள்ளது. மேலும் Animal Welfare Board of India நிறுவனத்தில் பதிவு பெற்ற NGO நிறுவனம் மூலம் இப்பணிகளை மேற்கொள்ளவும் , இதன்படி இந்நகராட்சி பகுதியில் திரியும் 545 நாய்களுக்கு கருத்தடை செய்ய ஆகும் செலுவுத் தொகை ரூ9,00,000/–(ஒன்பது இலட்சம் மட்டும்) மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து இச்செலவினத் தொகையை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்:3030/2013/எச்1)**

**தீர்மானம் :584 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:38***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 15 ஒப்பந்ததாரராக பணிகளை எடுக்கும் நபர்களிடம் அவர்களின் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் 1% மற்றும் 5% வைப்புத்தொகையானது அந்தந்த வருட வைப்புத்தொகை பதிவேட்டில் முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறது.இதில் ஒப்பந்தாரர் திருமதி.G.A.முத்துலட்சுமி என்பவருக்கு 18.01.2018 மற்றும் 02.03.2018 ன் மூலம் பிடித்தம் செய்யப்பட்ட தொகை காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் கீழ்க்கண்ட பட்டியல்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பதிவேடு விபரம் வருடம் | பக்கம் எண் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | RF Lapsed Deposit Register Volume -1 2017-2018 | Pg.No.94, S.No.101 | ரூ.200000/- |
| | | Pg.No.100, S.No.149 | ரூ.167800/- |
| | | மொத்தம் | ரூ.367800/- |

மேற்கண்ட வைப்புத்தொகையினை வழங்க அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**(ந.க.எண்:7342/22/இ1)**

**தீர்மானம் :585 காலங்கடந்த நிலுவை வைப்பு தொகையினை ஒப்பந்தாரருக்கு திரும்ப வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:39***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்ற 1989-90 முதல் 2012-13 முடிய ஆண்டிற்கு 5 வது ஊதிய குழு நிலுவை மீதான வட்டி ரூ.24,86,127/- தொகையினை பிரித்து சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கு வழங்க விலைப்புள்ளிகள் கேட்கப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | V.Seenivasan, Consultant for Municipal & Town Panchayat ABA Systerm, 144/62, Dhanuskodiapuram Pillaiyarkovil Street, Kovilpatti -628501. | 29000/- |
| 2 | Madhubalan & Associates Chartered Accountants, Madurai | 30000/- |

பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள V.Seenivasan, Consultant for Municipal & Town Panchayat ABA Systerm, Kovilpatti என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்
**(ந.க.எண்:8106/22/பி1)**

**தீர்மானம் :586** **திரு.V.Seenivasan, என்பவரின் குறைந்த விலைப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**

***<u>பொருள் எண்:40</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பெரியார் வணிக வளாகம் திறந்த வெளிக்கடைகள் கடை எண் 5,11 ஆகிய இரு கடைகளை மாத வாடகைக்கு மூன்றாண்டுகளுக்கு (2023–2024 முதல் 2025–2026) குத்தகைக்கு விட நகர்மன்றதீர்மான எண் 445 நாள் 26.4.2023 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு சொந்தமான பெரியார் வணிக வளாகம் திறந்த வெளிக்கடைகள் கடை எண் 5,11 ஆகிய இரு கடைகளை மூன்றாண்டுகளுக்கு (2023–2024 முதல் 2025–2026) மாதவாடகைக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி 20.6.2023 அன்று கோரப்பட்டது. அன்றைய தினம் பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குத்தகைதாரரர் பெயர் /முகவரி | கடை எண் | மாதம் ஒன்றிற்கு வாடகை மட்டும் ஒப்பந்தப்புள்ளியில் அளித்துள்ள தொகை ரூ | பொது ஏலம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.சு.விநோத்கண்ணன்<br>த/பெ. சுபாஷ் சந்திர போஸ்<br>2/50 நடுத்தெரு அத்திக்குளம்<br>ஸ்ரீவில்லிபுத்தூர் | 5 | 770/– | பொது ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன் வரவில்லை |
| 2 | திரு.மு.கருப்பையா<br>தபெ.முத்தையா<br>243 வடக்கு தெரு கோட்டைபட்டி<br>ஸ்ரீவில்லிபுத்தூர் | | 700/– | |
| 3 | திரு.சு.விநோத்கண்ணன்<br>த/பெ. சுபாஷ் சந்திர போஸ்<br>2/50 நடுத்தெரு அத்திக்குளம்<br>ஸ்ரீவில்லிபுத்தூர் | 11 | 770/– | |
| 4 | திரு.மு.கருப்பையா<br>தபெ.முத்தையா<br>243 வடக்கு தெரு கோட்டைபட்டி<br>ஸ்ரீவில்லிபுத்தூர் | | 700/– | |

**அலுவலகக்குறிப்பு :-** 1) மேற்படி கடைகள் கடந்த ஆண்டில் (2022–2023) மாதவாடகை ரூ.630/– வசூலிக்கப்பட்டு வந்துள்ளது. தற்போது வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளிலும் கடை எண் 5 மற்றும் 11 ஆகிய இரு கடைகளுக்கும் மாத வாடகை மட்டும் மாதம் ஒன்றிற்கு ரூ.770/– அதிகபட்சமாக ஒப்பந்தபுள்ளி தொகை குறிப்பிட்டுள்ள திரு.சு.விநோத்கண்ணன் த/பெ. சுபாஷ் சந்திர போஸ் 2/50 நடுத்தெரு அத்திக்குளம் ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற குத்தகைதாரர் தந்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

2) வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் கடை எண் 5 மற்றும் 11 கடைகளுக்கு அதிகபட்ச மாத வாடகை தொகை ரூ.770/– திரு.சு.விநோத்கண்ணன் த/பெ. சுபாஷ் சந்திர போஸ் 2/50 நடுத்தெரு அத்திக்குளம் ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற குத்தகைதாரருக்கு நிர்வாக நலன் கருதி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:1499/2023/அ5)**

**தீர்மானம் :587**

1) **திரு.சு.விநோத்கண்ணன் த/பெ. சுபாஷ் சந்திர போஸ் என்பவரின் அதிகபட்ச ஏலக்கேள்வி அங்கீகரிக்கப்ட்டது .**
2) **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்ட்டது**

***பொருள் எண்:41***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மூன்றாண்டு குத்தகை இனங்களில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 04 பெருமாள்பட்டி மெயின்ரோடு கீழ்பக்கமுள்ள சமுதாய கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஆண்டு குத்தகைக்கு பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்றதலைவர் அவர்களின் முன்அனுமதி நாள் 26-06-2023ல் அனுமதிக்கப்பட்டதன்படி 06-07-2023ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு

| **வ.எண்** | **ஒப்பந்தகாரர் பெயர்** | **தொகை** |
|---|---|---|
| 1 | திரு. மூ. காட்டுராஜா, | ரூ.1,15,000/- |
| 2 | திரு. கா. கனி | ரூ.1,10,000/- |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதிகமான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.மூ.காட்டுராஜா, ஸ்ரீவில்லிபுத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** 1) அனுமதி வழங்கலாம்.

2) நகர்மன்ற தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண்:7284/2023/அ5)**

**தீர்மானம் :588** **திரு. மூ. காட்டுராஜா, என்பவரின் அதிகபட்ச ஏலக்கேள்வி அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:42***

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி வருவாய் பிரிவின் அருகினில் உள்ள புங்கை மரத்தில் இருந்து அடிக்கடி பாம்பு போன்ற விஷ பூச்சிகளின் நடமாட்டம் காணப்படுவதால் வருவாய் பிரிவு, பொறியாளர் பிரிவு மற்றும் பொது பிரிவு ஆகிய பிரிவுகளில் உள்ள ஜன்னல்களுக்கு அலுமினியத்தினால் ஆன கொசு வலை மாட்டப்பட வேண்டியது மிகவும் அவசியமாகின்றது. மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30000/- ஆகும் (முப்பதாயிரம் மட்டும் ) அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு உள்ளூர் மரக்கடைகளில் நேரடி விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | சரவணா டிரேடர்ஸ் டிம்பர் டிப்போ, ஸ்ரீவில்லிபுத்தூர் | ரூ. 29,900/- |
| 2 | ஓம் முருகா கம்ப்யூட்டர் உட் டிசைனிங் & கார்விங் ஒர்க்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ. 30,000/- |

மேற்படி வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள சரவணா டிரேடர்ஸ் டிம்பர் டிப்போ, ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கிடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள சரவணா டிரேடர்ஸ் டிம்பர் டிப்போ, ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.
4) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்: 3379/2023/ இ1)**

**தீர்மானம் :589** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***<u>பொருள் எண்:43</u>***

இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியின் கீழ் வார்டு எண் 2, அசோக் நகர் பகுதி கருப்பசாமி கோவில் எதிரே உள்ள பகுதியில் வடிகால் கட்டும் பணிகள் மேற்கொள்வதற்கு **07.07.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ .எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|
| 1 | திரு. V. அழகர்ராஜ், ஒப்பந்ததாரர் | 0.06 % குறைவு. |
| 2 | திரு. S. கந்தசாமி, ஒப்பந்ததாரர் | 0.60 % அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள **திரு. V. அழகர்ராஜ்**, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட **0.06%** குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.06%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திரு. V. அழகர்ராஜ்,** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.
2) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**( ந.க.எண் :2890/2023/ இ1)**

**தீர்மானம் :590** **திரு. V.அழகர்ராஜ், என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது .**

***<u>பொருள் எண்:44</u>***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில் பின்வரும் விவரப்படி கணிணிகள், பிரிண்டர்கள், மற்றும் யூபிஎஸ் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

| வ.எண் | விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1 | கணிணிகள் | 25 எண்ணம் |
| 2 | லேசர் பிரிண்டர்கள் | 16 எண்ணம் |
| 3 | டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர் | 4 எண்ணம் |
| 4 | யூ.பி.எஸ் | 3 எண்ணம் |

மேற்கண்ட பொருட்களை 01.05.2022 முதல் 30.04.2023 வரை ஆண்டு பராமரிப்பு பணியினை ரூ.**1,75,000/** மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகர்மன்ற தீர்மான எண் 5, நாள் 24.01.2022 ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண் 55, நாள் 25.02.2022 ன் படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள அபி எனர்ஜி கார்ப், புளியங்குடி என்ற நிறுவனத்தின் மூலம் வருடாந்திர பராமரிப்பு பணி நடைபெற்று வருகின்றது, மேற்கண்ட ஆண்டு பராமரிப்பின் காலம் **30.04.2023**ம் தேதியுடன் முடிவடைந்து விட்டது. மேலும் தற்போது ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் அபி எனர்ஜி கார்ப், புளியங்குடி என்ற நிறுவனத்தின் ஆண்டு பராமரிப்பு பணியானது திருப்திகரமாக உள்ளதாலும், மேலும் தற்போது ஆண்டு பராமரிப்பு முடிவு பெற்று ஒரு மாதம் ஆகின்ற நிலையில், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்வதற்கு காலதாமதம் ஆகின்ற சூழ்நிலை உள்ளதாலும், மேலும் மேற்கண்ட பராமரிப்பு பணியினை தற்போது உடன் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதால், மேற்காணும் பணியினை ஏற்கனவே பார்த்து வரும் அபி எனர்ஜி கார்ப், புளியங்குடி என்ற நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வரும் விலை விகிதத்திலேயே தொடர்ந்து **2023-24** ம் ஆண்டிற்கு மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொளப்பட வேண்டும் என்ற விவரம் பணிவுடன் தெரிவிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) இந்நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் கணிணிகள், பிரிண்டர்கள் மற்றும் யூபிஎஸ்களின் ஆண்டு பராமரிப்பு காலம் 30.04.2023 ம் தேதியுடன் முடிவடைந்து விட்டதால், மேற்கண்ட பணிக்கு தற்போது மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும், மேலும் தற்போது மேற்கண்ட வருடாந்திர பராமரிப்பு பணியின் ஒப்பந்தகாலம் முடிவடைந்து விட்டாலும், பணியினை தொடர்ந்து அபி எனர்ஜி கார்ப், புளியங்குடி என்ற நிறுவனம் தொடர்ந்து பராமரிப்பு பணி மேற்கொண்டு வருகின்றது, எனவே மேற்கண்ட உபகரணங்களுக்கு 2023-24 ம் ஆண்டிற்கு அபி எனர்ஜி கார்ப், புளியங்குடி என்ற நிறுவனத்தின் மூலம் மேலும் ஓராண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணியினை ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் விலை விகிதத்திலேயே மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை நகராட்சியின் பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண் :2397/2023/இ1)**

**தீர்மானம் :591** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***பொருள் எண்:45***

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தினில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் **2021-22** மற்றும் **2022-23** ம் ஆண்டுகளில் நடைபெற்ற பணிகளை TUFIDCO நிறுவனம் தேர்வு செய்யப்பட்ட பொறியியல் கல்லூரிகள் மூலம் ஆய்வு செய்து ( Third Party Inspection ) அறிக்கை பெற தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி விருதுநகர் மாவட்டத்தில் கலுசலிங்கம், பல்கலைக்கழகம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே கீழ்க்காணும் பணிகளை கலுசலிங்கம், பல்கலைக்கழகத்தின் மூலம் 19.06.2023 ம் தேதி ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை பெறப்பட்ட வகைக்கு 12500 + 7500 = 20000/- ஐ (ரூபாய் இருபதாயிரம் மட்டும் ) கலுசலிங்கம், பல்கலைக்கழகத்திற்கு செலுத்திடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-22 | இந்நகர் திருப்பாற்கடல் குளம் மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ளுதல் | **107.00/-** |
| 2 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-23 | இந்நகர் நல்லகுற்றாலபுரம் தெரு அசோக் நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் | **41.00/-** |

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண் :2651/2023/ இ1)**

**தீர்மானம் :592** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***<u>பொருள் எண்:46</u>***

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பொது பிரிவு சி1 பிரிவு மற்றும் கணிணி வரி வசூல் மையத்தில் உள்ள பிரிண்டர் ஆகிய இரு பிரிண்டர்களையும் பழுது நீக்கம் செய்யும் பணியினை மேற்கொள்வதற்கு **28.06.2023** ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | GURUVARSHITHA COMPUTERS, Srivilliputtur. | Rs. 16,700/- |
| 2 | AG Printing Systems, Rajapalayam. | Rs. 15,000/- |
| 3 | Challenge Computers, Rajapalayam. | Rs. 18,000/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் AG Printing Systems, Rajapalayam என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியானது குறைவாக உள்ளதால் மேற்கண்ட விலைப்புள்ளியானது ஏற்றுக் கொண்டு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண் :2397/2023/ இ1)**

**தீர்மானம் :593** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

***<u>பொருள் எண்:47</u>***

இந்நகர் வார்டு எண் 24 மேட்டுத்தெரு மற்றும் வார்டு எண் 16 மடத்துப்பட்டி தெருக்களில் சிறுபாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு **19.07.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ .எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|
| 1 | திரு. V. அழகர்ராஜ், ஒப்பந்ததாரர் | 0.02 % குறைவு. |
| 2 | திரு. S. கந்தசாமி, ஒப்பந்ததாரர் | 1.58 % அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள **திரு. V. அழகர்ராஜ்,** என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட **0.02%** குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.02%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திரு. V. அழகர்ராஜ்,** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.
2) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண் 3004/2023/ இ1)**

**தீர்மானம் :594** **திரு.V.அழகர்ராஜ்,ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது .**

***<u>பொருள் எண்:48</u>***

இந்நகர் வார்டு எண் 31,மஞ்சப்பூத் தெருக்களில் இரு எண்ணம் சிறுபாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு **19.07.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ .எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|
| 1 | திரு. V. அழகர்ராஜ், ஒப்பந்ததாரர் | 0.06 % குறைவு. |
| 2 | திரு. S. கந்தசாமி, ஒப்பந்ததாரர் | 1.54 % அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள **திரு. V. அழகர்ராஜ்**, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட **0.06%** குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.06%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திரு. V. அழகர்ராஜ்,** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.
2) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண் :3004/2023/ இ1 )**

**தீர்மானம் :595** **திரு.V.அழகர்ராஜ்,ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது .**

***<u>பொருள் எண்:49</u>***

இந்நகராட்சிக்கு 2022-23ம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், பாரங்கள் மற்றும் அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன்கள் வாங்கி கொள்ள உத்தேச செலவு தொகை ரூ20/– லட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 65 நாள் 25.05.2022ல் அனுமதி வழங்கப்பட்டது.அதன்படி வரப்பட்ட மூன்று விலைபுள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளிகல் அளித்த சிவகாசி பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கு தீர்மான எண் 158 நாள் 25.08.2022 மூலம் அனுமதி வழங்கப்பட்டது. இந்நிலையில் பேருந்து நிலைய கட்டண கழிப்பறை மூன்றாண்டு குத்தகை முடிந்து நகராட்சி பணியாளர்கள் மூலம் 01.04.2023 முதல் துறை மூலம் கட்டண கழிப்பறை வசூலக்கப்பட்டுவருகிறது. அதேபோல் குலாலர் தெருவில் உள்ள கழிப்பறை ஏலம் எடுத்த ஒப்பந்ததார் நடத்த முடியாததால் நகராட்சி மூலம் கழிப்பறை நடத்தப்படுதால் அலுவலகத்தில் கட்டண கழிப்பறை ரசீது புத்தகம் இருப்பில் இல்லாத காரணத்தினால் அவசர அவசியம் கருதி 2022–2023ம் ஆண்டிற்கு மன்றம் அனுமதிக்கப்பட்ட சிவகாசி நிறுவனத்திடம் இருந்து கட்டணம் கழிப்பறை ரசீது புத்தகங்கள் அச்சடிக்கவும், புதிய வரி விதிப்பு விண்ணப்பம் இருப்பில் இல்லாதால் நிர்வாக நலன் கருதி மேற்படி விண்ணப்பதினை மேற்படி அச்சகதரார்கள் மூலம் அச்சடிக்க ஆகும் உத்தேச செலவு தொகை ரூ50,000/–த்திற்கும் 2022–2023 நிதியாண்டிற்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி நிறுவனத்திடம் இருந்து விலைபட்டியல் பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | கட்டண கழிப்பிடம் ரசீது தொகை | புதிய வரி சொத்து தொகை |
|---|---|---|---|---|
| 1 | சிவகாசி பிரிண்டர்ஸ் | 1000 எண்ணம் | 45000/– | 3200/– |
| 2 | மேலகரம் பிரிண்டர்ஸ் | | 50000/– | 4500/– |
| 3 | தர்மபுரி பிரிண்டர்ஸ் | 20பேடு | 49000/– | 3900/– |

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சிவகாசி பிரிண்டர்ஸ் சர்வீஸ் இண்ட்ரியல் கோ ஆப்செட் சொசைட்டி லிமிடெட் வேலை உத்தரவு வழங்கி சப்ளை செய்ததை மன்றபொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அவசர அவசியம் கருதி நிதியாண்டு முடியும் தருவாய் உள்ளதால் நகராட்சி மூலம் 01.04.2023ம் தேதி முதல் கட்டண கழிப்பறை இயக்க வேண்டிய சூழ் நிலையில் ஏற்கனவே குறைந்த விலைப்புள்ளி பெற்ற சிவகாசி பிரண்டர்ஸ் நிறுவனத்தின் மூலம் அச்சடித்த பெற்றதையும் நகர் மன்றத்தலைவர் அவர்களிடம் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் :2983/2023/ பி2)**

**தீர்மானம் :596** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:50***

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளுக்குட்பட்ட நகர்மன்றத் தலைவர் துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு அடையாள அட்டை தயார் செய்து வழங்க வேண்டியுள்ளது. மேற்கண்ட அடையாள அட்டை தயார் செய்து வழங்க விலைப்புள்ளிகள் கேட்கப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | விநாயகா ஸ்டுடியோஸ், தெற்கு ரத விதி, ஸ்ரீவில்லிபுத்தூர் | 185 (ஒரு அடையாள அட்டை) |
| 2 | தனஸ்ரீ ஸ்டுடியோஸ் மாயாண்டிப்பட்டி தெற்கு தெரு ஸ்ரீவில்லிபுத்தூர் | 105 (ஒரு அடையாள அட்டை) |

பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள தனஸ்ரீ ஸ்டுடியோஸ் மாயாண்டிப்பட்டி தெற்கு தெரு ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்வும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:3300/2023/ அ2)**

**தீர்மானம் :597** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

***பொருள் எண்:51***

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் நகரம் மேட்டுத்தெருவில் 07–08–1974ல் நிருவப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் திருவுருவச்சிலை சிதலடையும் நிலையில் உள்ளதால் முழு உருவச்சிலையை மராமரத்து செய்து புதுப்பிக்க அனுமதி வழங்குமாறு தலைவர் திரு.ஆர். பாலகிருஷ்ணதேவர் மறவர் சமுதாயம் மேட்டுத்தெரு அவர்கள் மனு செய்துள்ளார். மேற்கண்ட மனுவினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

இடம் பார்வையிடப்பட்டது, இடமானது இந்நகர் எல்லைக்குட்பட்ட மேட்டுத்தெரு சர்வே வார்டு.2, பிளாக் எண்.3 சர்வே எண்.830 மேட்டுத்தெருவாக உள்ளது .மேற்கண்ட தெரு கிழமேல் தெருவாகும், மேற்கண்ட கிழமேல் தெரு கிழக்கு பக்கம் 11.30மீ மேற்கு பக்கம் 7.30மீ அகலம் கொண்ட தெருவாக உள்ளது. கிழக்கு பக்கம் நெடுஞ்சாலைத்துறைக்கு பாத்தியப்பட்ட மேலரவீதியை இணைக்கும் தெருவில் மேட்டுத்தெருவின் வடக்கு பக்கத்தில் மூலையில் 1.50மீx1.50மீ என்ற

அளவில் உள்ள இடத்தில் பசும்பொன் முத்துராமலிங்கதேவர் அவர்களின் திருவுருவ முழுசிலை சிமெண்டினால் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி திருவுருவச்சிலை நிறுவப்பட்டு சுமார் 50 ஆண்டு காலம் உள்ளதாகவும் கல்வெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் முழுதிருவுருவச்சிலை சிதலமடையும் நிலையில் உள்ளதை நல்ல முறையில் மராமரத்து பணிகள் செய்ய அனுமதி வழங்க மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நடவடிக்கைக்காக அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்:3831/2023/ எப்1)**

**தீர்மானம் :598**

**பசும்பொன் உ.முத்திராமலிங்க தேவரின் சிலை பாராமரிப்பு பணிக்காக நடவடிக்டிகை மேற்க்கொள்ளும் பொருட்டு அனுமதி கோரி மாவட்ட ஆட்சியர் அவர்ளுக்கு கடிதம் அனுப்ப மன்றம் அனுமதிக்கப்பட்டது.**